ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1697/1 - 2011 මාර්තු 14 වැනි සඳුදා - 2011.03.14
*1697/1 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### 2010 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, கிழக்கு மாகாண முத்திரைக் கட்டணக் கைமாற்ற நியதிச்சட்டம்

*கிழக்கு மாகாண முதலமைச்சரும், நிதி, உள்ளூராட்சி, புனர்வாழ்வு புனரமைப்பு, கிராம அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் சுற்றாடல் துறை அமைச்சருமான, சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் கிழக்கு மாகாண நிருவாகப் பிரதேசத்தினுள் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதியன்று செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க கிழக்கு மாகாண முத்திரைத் தீர்வை நியதிச் சட்டத்தை இத்தால் பகிரங்கப்படுத்திக் கட்டளையிடுகின்றேன்.*

*சிவனேசதுரை சந்திரகாந்தன்,*
*கிழக்கு மாகாண முதலமைச்சரும்,*
*நிதி, உள்ளூராட்சி, புனர்வாழ்வு*
*புனரமைப்பு, கிராம அபிவிருத்தி,*
*சுற்றுலா மற்றும் சுற்றாடல் துறை*
*அமைச்சரும்.*

*முதலமைச்சர் செயலகம்,*
*கிழக்கு மாகாண சபை,*
*உட்துறைமுக வீதி,*
*திருகோணமலை,*
*2011, மாச்சு 8.*

### 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, கிழக்கு மாகாண முத்திரைக் கட்டணக் கைமாற்ற நியதிச்சட்டம்

*2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கிழக்கு மாகாண நிதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகளை கிழக்கு மாகாண உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு மாற்றுதல், நிருவாகச் செலவினத்தை மாகாண நிதிக்கு அறவாக்குதல் அத்துடன் அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்கின்ற ஓர் நியதிச்சட்டம்*

*கிழக்கு மாகாண சபையினால் கீழ்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்*

*1. இந்நியதிச்சட்டம் "2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க கிழக்கு மாகாண முத்திரைத் தீர்வை கைமாற்றுதல் நியதிச் சட்டம்" என எடுத்துக்காட்டப்படலாம்.*

*முத்திரைத் தீர்வைகளை கைமாற்றுதல்.*

*2. (1) கிழக்கு மாகாணத்தின் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாண நிதி நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தின் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவன நிருவாக எல்லைகளுக்குள்ளமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனக்கை மாற்றம் சார்பாக நிறைவேற்றப்படும் அத்தகைய சாதனம் தொடர்பில் மாகாண சபை ஏதேனும் முத்திரைத் தீர்வை (இதனகத்துப்பின்னர் தீர்வை) அறவிட்டு சேகரித்து மாகாண நிதியத்துக்கு செலுத்தியுள்ளவிடத்து அத்தகைய தீர்வையானது எந்த ஆண்டிற்கு சேகரிக்கப்பட்டதோ*

**கவனிக்க.**- இல. 1696/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் இறுதி இலக்கம் : 1696/27 ஆகும்.

